சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திரு. வா. சுந்தரராஜ்,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண்.02/2023

இன்

அசல் வழக்கு எண்.68/2013

...

M.S.கார்த்திகேயன் ...மனுதாரர்/உத்தேச 9ம் பிரதிவாதி

/எதிர்/

1) R.M.காசி ..1ம் எதிர்மனுதாரர்/வாதி

2) தலைவர்
சாம்பவிகா கல்வி அறக்கட்டளை, சிவகங்கை.

3) செயலாளர்,
சாம்பவிகா கல்வி அறக்கட்டளை, சிவகங்கை.

4) செயலாளர்,
சாம்பவிகா மேல்நிலைப்பள்ளி, ராகினிப்பட்டி, சிவகங்கை.

5) A.M.சேகர்

6) S. ராணி

7) K.பாலமுருகன்

8) மலர்வேணி

9) K. பாரதிதாசன் ..2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 27.09.2023-ம் தேதியன்று வந்தபோது மனுதாரர்/உத்தேச 9ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாலச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 9ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.J.செங்கோல் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களை கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உ த் த ர வு**

மனுதாரர்/உத்தேச 9ம் பிரதிவாதியை தாவா வழக்கில் 9ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு தாவா மனுவினை அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை I விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் : -**

1ம் எதிர்மனுதாரர்/வாதி தாவா வழக்கு சாம்பவிகா கல்வி அறக்கட்டளையினைப் பொறுத்து 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை, நிரந்தர உறுத்துக்கட்டளை கணக்கு விபரங்கள் தொடர்பாக முதலேற்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் 9ம் எதிர்மனுதாரர் K.பாரதிதாசன் அவர்கள் தாவா அறக்கட்டளையில் இருந்து விலகிக்கொள்வதாக அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் கடிதம் ஒன்றினை அனுப்பினார்.மேற்படியாரின் கோரிக்கையும் அறக்கட்டளை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு K.பாரதிதாசன் அவர்களும் அறக்கட்டளை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு 9ம் பிரதிவாதி அறக்கட்டளை உறுப்பினராக ஆவண எண்.14/2016 அறக்கட்டளை திருத்தல் ஆவணம் மூலம் அறக்கட்டளை உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

மனுதாரர் தாவா அறக்கட்டளையின் உறுப்பினரான பிறகு தாவா அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பங்கு பெற்று வருகின்றார். இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 7, 8 எதிர்மனுதாரர்கள்/6, 7 பிரதிவாதிகள் தாவா அறக்கட்டளையின் கூட்டத்திற்கு ஒருமுறைக்கூட வராமலும் கூட்டத்திற்கு வராதது சம்பந்தமாக யாதொரு தகவலும் தெரிவிக்காமலும் இருந்து வந்தனர். அதேபோல் மேற்படி 7-ம் எதிர்மனுதாரர்/6-ம் பிரதிவாதி அரசுப்பணியில் இருந்து வந்ததாலும் மேற்படி மூவரும் அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இல்லாமலும், ஒத்துழைப்பு வழங்காததாலும் தாவா அறக்கட்டளை மற்றும் பள்ளிக்கு பல இன்னல்களையும், இடையூர்களையும் பல வகைகளில் செய்து

வந்ததால் 15.07.2017ம் தேதியில் இருந்து 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 7, 8 எதிர்மனுதாரர்கள்/6, 7 பிரதிவாதிகள் தாவா அறக்கட்டளை கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி அறக்கட்டளை உறுப்பினர்கள் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தாவா அறக்கட்டளை ஆவணத்திலும் 19.12.2017ம் தேதி மேற்படியார்கள் நீக்கங்கள் குறித்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி ஆவண எண்.14/2016 ஆட்சேபணை செய்து சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மேற்படி ஆவணத்தினை ரத்து செய்யக் கோரி மனு அளித்ததில் மேற்படி மனுவும் செ.மு.எண்.2080/இ1/2022 என்ற எண்ணில் எண்ணிடப்பட்டு இருதரப்பு விசாரணைக்கு பிறகு 31.10.2022ம் தேதி உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மனுதாரரும் தாவா அறக்கட்டளையின் உறுப்பினராக உள்ளதினால் தாவா வழக்கிற்கு மனுதாரர் அவசியமான கட்சிக்காரர் ஆவார். தாவா வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரமும் தாவா அறக்கட்டளை தொடர்பாக உள்ளதினால் மனுதாரரும் தாவா அறக்கட்டளை உறுப்பினர் என்பதன் அடிப்படையில் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் வழக்கிற்கு எதிரான ஆட்சேபணைகளையும் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் எடுத்துரைக்க மனுதாரரையும் தாவா வழக்கில் 9ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. தாவா வழக்கில் மனுதாரருக்கு எதிராக மேற்படி ஆவணத்தை ஆட்சேபணை செய்து 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் மனுதாரரை கட்டுப்படுத்தாமல் தீர்ப்பு பெற முயற்சித்து வருகின்றார். மனுதாரரை தாவா வழக்கில் 9ம் பிரதிவாதியாக சேர்த்தால் மட்டுமே உரிய தரப்பினர்களை கட்டுப்படுத்தி தங்களால் அறக்கட்டளையின் சார்பில் தாவா வழக்கில் உரிய தீர்வு பெற இயலும். எனவே மனுதாரரை தாவா வழக்கில் 9ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும்.

**3) <u>5 முதல் 7 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பின் எதிருரையின் சுருக்கம்</u> : -**

மனுதாரர் தாவா வழக்கின் வாதிகளான A.M.சேகர், S.ராணி ஆகியோர்களின் மூத்த மகன் ஆவார். வாதிகள் திட்டமிட்டு சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் கீழ் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களையும், அதன் பல கோடி மதிப்புள்ள சொத்துக்கள் வருமானங்களையும் 10 ஆண்டுகளுக்கு மேலாக யாதொரு கணக்கு வழக்குகளையும் ஒப்படைக்காமல், கையடக்கம் செய்து மேற்படி அறக்கட்டளையின் சட்ட, திட்ட விதிகளை மீறி தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறார்கள். மனுதாரர் மற்றும் மேற்படியாரின் பெற்றோர்கள் ஆகியோர்கள் கூட்டு சதி செய்து தாவா அறக்கட்டளையின் இதர ஸ்தாபக உறுப்பினரான பாலமுருகன், மலர்வேணி மற்றும் நிறுவனரான தன்னையும் ஆக மேற்படி அறக் கட்டளையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் இல்லாமல் தாவா அறக் கட்டளையின் பைலாவிற்கு எதிராக மேற்படி திருத்தல் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள். மேற்படி மனுதாரர் குறிப்பிடும் ஆவண எண்.14/2016 என்பது சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் பைலா விதிகளின்படி செல்லத்தக்கதில்லை. மேற்படி அறக்கட்டளையின் பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு தெரியாமல் பண பலத்தை பயன்படுத்தி சட்டவிரோதமாக மேற்படி ஆவணம் மனுதாரர் மற்றும் மேற்படியாரின் பெற்றோர்களின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவண எண்.14/2016-ன் உண்மைத்தன்மை, அதன் செல்லுபடியாகும் தன்மை ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். மனுதாரர் குறிப்பிடும் ஆவணம் ஒரு போலியான ஆவணம் ஆகும். மேற்படி ஆவணம் எந்த காலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை. மேற்படி போலி ஆவணம் தாவா சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான பல கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் மற்றும் மேற்படியாரின் பெற்றோர்களால் திட்டமிட்ட மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட மற்றொரு போலி ஆவணத்தினையும் ஆவண எண்.41/2017 ஆகியவற்றை ரத்து செய்யக்கோரி சிவகங்கை மாவட்ட பதிவாளரிடம் 5 முதல் 7 எதிர்மனுதாரர்களால் மனு செய்து, அதுவும் நாளது தேதி வரையில் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் ஆவண எண்.41/2017-ன்படி மனுதாரரின் மற்றொரு சகோதரர் M.S.கார்த்திகேயனையும் உறுப்பினராக சேர்த்து 5, 6, 7 எதிர்மனுதாரர்களை நீக்கி மற்றொரு போலி ஆவணம்

தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மோசடியாக பதிவு செய்யப்படும் போலி ஆவணங்களை ரத்து செய்ய தமிழக அரசின் பதிவு சட்டம் 1908 இன் பிரிவு 5(A) தமிழ்நாடு சட்டம் 41/220 ஆகியவற்றின் இந்த நம்பர் 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் பத்திரப்பதிவு துறையில் முறையாக மனு செய்து விசாரணை நடந்து வருகிறது. மேலும் மேற்படி இரண்டு ஆவணங்களும் இதச.சட்ட பிரிவுகள் 463, 464, 470-ன் கீழ் மோசடி மற்றும் போலி ஆவணங்கள் ஆகும்.

மேற்படி போலி ஆவணங்களை ரத்து செய்ய தமிழக சட்டமன்றத்தில் ஆக்ட் 27/2021 சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்திய குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறப் பட்டுவிட்டது. எனவே சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு மற்றும் அதன்படி சென்னை பதிவுத்துறை தலைவரின் சுற்றறிக்கை நாள் 04.01.2023-ன்படி மனுதாரர் குறிப்பிடும் ஆவண எண்.14/2016 மற்றும் ஆவண எண்.41/2017 ஆகிய இரண்டு போலி பதிவுகளும் ரத்து செய்யப்பட வேண்டியதாய் உள்ளது. அதுவும் சிவகங்கை மாவட்ட பதிவு துறையில் நிலுவையில் உள்ளது. இந்நீதிமன்றத்தில் தாவா O.S.No.68/2013 வழக்கு நிலுவையில் உள்ளது போல சிவகங்கை டி.மு.கோர்ட்டில் O.S.No.100/2015, O.S.No.61/2017 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள போது சட்ட விரோதமாக மனுதாரர் மற்றும் மேற்படியாரின் பெற்றோர்கள் மேற்படி இரண்டு போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார்கள் என்பது தெளிவாக தெரியவருகிறது. மேற்படி வழக்குகள் பல வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது. 2016, 2017 ஆண்டுகளில் மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்கள் சேர்ந்து உற்பத்தி செய்த ஆவணங்களை 6, 7 ஆண்டுகளாக மறைத்து வைத்திருந்து தாவா வழக்கு விசாரணைக்கு பட்டியலில் இட்ட பிறகு தாவா வழக்கு விசாரணையை தாமதப்படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மனுதாரர் தாவா மனுவையும் காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாவா சாம்பவிகா அறக்கட்டளையில் எந்த காலத்திலும் உறுப்பினராக செயல்பட்டது கிடையாது. மேற்படியார் தாவா வழக்கிற்கு தேவையற்ற, அவசியமற்ற கட்சிக்காரர் ஆவார். எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்க தக்கதா என்பதேயாகும்?

**5.** மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** மனுதாரர் 9ம் உத்தேச பிரதிவாதி. தற்போது சாம்பவிகா அறக்கட்டளையில் உறுப்பினராக செயல்பட்டு வருகிறார். தாவா வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/ வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 8ம் பிரதிவாதி K.பாரதிதாசன் தாவா அறக்கட்டளையில் இருந்து விலகிக்கொள்வதாக அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியதை அறக்கட்டளை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு K.பாரதிதாசனை அறக்கட்டளை பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக ஆவண எண்.14/2016 அறக்கட்டளை திருத்தல் ஆவணம் மூலமாக மனுதாரர்/உத்தேச பிரதிவாதி அறக்கட்டளை உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். எனவே மனுதாரர்/உத்தேச பிரதிவாதி வழக்கினை தீர்மானிப்பதற்கு அவசிய தரப்பினர் ஆவார். சாம்பவிகா அறக்கட்டளை உறுப்பினராக மனுதாரர்/உத்தேச பிரதிவாதி அறக்கட்டளை திருத்தல் ஆவணம் மூலம் அறக்கட்டளை உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. எனவே வழக்கினை தீர்மானம் செய்வதற்கு மனுதாரர்/உத்தேச பிரதிவாதி அவசிய தரப்பினர் என்பதால் அவரை இந்த வழக்கில் 9ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த அனுமதி அளிக்கப்படுகிறது.

**7.** முடிவாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர் இந்த வழக்கில் 9ம் உத்தேச பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி:</u> இல்லை.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>

ம.சா.ஆ.1 - 03.01.2023 - R.M.காசி, பாலமுருகன், மலர்வேணி ஆகிய மூவரும் மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த மனு - நகல்

ம.சா.ஆ.2 - 31.10.2022 - சிவகங்கை மாவட்ட பதிவாளர் (நிருவாகம்) அவர்களின் உத்தரவு - நகல்

ம.சா.ஆ.3 - 04.01.2023 - சென்னை பதிவுத்துறை தலைவர் அலுவலக சுற்றறிக்கை நகல்

ம.சா.ஆ.4 - 25.03.2022 - சென்னை பதிவுத்துறை தலைவர் அலுவலக சுற்றறிக்கை நகல்

<u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u>

<u>மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை -

V SUNDARARAJ Digitally signed by V SUNDARARAJ Date: 2023.10.20 16:25:47 +0530

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

சார்பு நீதிமன்றம்
சிவகங்கை
இ.ம.எண் 02-2023
இன்
மு.வ.எண்.68-2013
சீரான-வரைவு உத்தரவு
நாள். 19.10.2023